கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 134/2023

வாதி தரப்பு சாட்சி –1 மாணிக்கவாசகம் என்பவரை திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 15.06.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்தில் இருந்த ஓட்டுவில்லை வீட்டை இடித்து தற்போது கடை கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒரே ஒரு கடை கட்டப்பட்டுள்ளது. தாவா சொத்தை 5 முதல் 8 வரையான பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 2020 ம் ஆண்டு கிரையம் பெற்றுள்ளார்கள். எங்களுக்கு பாத்தியப்பட்ட மற்றொரு சொத்தின் 7 சென்ட் நிலத்தை நானும், எனது இரண்டு சகோதரிகளும் பழனியம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் ஸ்ரீரங்க ரெட்டியார் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. பாகப்பிரிவினை பத்திரத்தில் மேற்படி 7 சென்ட் நிலத்தை காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. காண்பித்துள்ளோம். அதன் சர்வே எண்.810/2A ஆகும். மேற்படி 7 சென்ட் நிலமானது பாகப்பிரிவினை ஏற்படும் முன்பே நாங்கள் கிரையம் செய்து கொடுத்ததால் பாகப்பிரிவினை ஆவணத்தில் மேற்படி 7 சென்ட் நிலம் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்றும், அதை தெரிந்து கொண்டே பாகப்பிரிவினை பத்திரத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மறைத்து பத்திரம் ஏற்படுத்தி பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

3. தாவா சொத்தை தொடர்ந்து 1ம் பிரதிவாதி 45 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வந்த விவரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், எனவே தாவா சொத்தில் என்னை Ouster செய்துவிட்டதாகவும், 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்தில் அனுபவ பாத்தியம் ஏற்பட்டுள்ள நிலையில், இவ்வழக்கை மேற்படி சங்கதிகளை மறைத்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதிக்கு கடந்த 1995 ல் நத்தம் பட்டா தாவா சொத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், அதை மறைத்து 2004 ல் பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தியுள்ளதால் இவ்வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4.   5 முதல் 8 வரையான பிரதிவாதிகள் தாவா சொத்தை எதார்த்தமாக கிரையம் பெற்று கடைகள் கட்டி தற்போது அனுபவம் செய்து வருவதை எவ்வகையிலும் இடையூறு செய்யாமல் தற்சமயம் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளது காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 1 முதல் 4 வரையான பிரதிவாதிகள் மட்டுமே கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அனுபவம் செய்து வருகீறார்கள் என்றும், எனவே தாவா சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், என்னால் பாகப்பிரிவினை கோரமுடியாது என்றால் சரியல்ல.  எனவே, இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**